விடுதியில் PG Course படிப்பவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதற்கும் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை தமிழகத்தின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதனை நிறைவேற்ற வாய்ப்பு இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றுதான் இது குறித்த ஓர் அறிவிப்பை என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் எதிர்கட்சித் தலைவர் கேட்டதற்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன் அல்லவா? நீங்கள் கொடுத்த அறிவிப்பு என் பரிசீலினையில் இருக்கிறது. உரிய நேரத்தில் நான் அது குறித்து சொல்கிறேன்.*